**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 383/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுடலைமணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சேர்மக்கனி | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | ஐந்தாம்கட்டளை | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 29th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஐந்தாம்கட்டளையில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவன வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி நந்தினி எனது மனைவி. பட்டியல் சாட்சி-2 மீனாட்சி எனது உறவினர். இந்த சம்பவத்திற்கு முன்னால் 6 மாதமாக நானும், எனது மனைவியும் தனியாக பிரிந்து வாழ்ந்து வந்தோம். எனக்கு ஒரு பையன், ஒரு மகள் உள்ளார்கள். ஏற்கனவே 2 தடவை என்னை எனது மனைவி ஆள் வைத்து நகை, பணம் கேட்டு அடித்துள்ளார். அந்த பழைய பகையை மனதில் வைத்துக்கொண்டு 23.03.2023 ம் தேதி, மாலை 06.00 மணியளவில் நல்லூரில் நான் ஆட்டோ ஓட்டிக் கொண்டு ஆப்பருக்கு போனபோது நல்லூரில் மீனாட்சி வீட்டின் முன்பு வைத்து எனது மனைவி எதிரி நந்தினி கத்திரிப்பானால் எனது வலது கையில் குத்தினார்.

நந்தினியின் தம்பி எதிரி தமிழ்ச்செல்வன் கல்லால் எனது தலையில் அடித்தார். அந்த இடத்திற்கு அருகில் மரவேளை செய்து கொண்டிருந்த இடத்தில் அரிவாள் கிடந்தது. அதை நான் எடுத்தேன் எனக்கு கையில் அடிப்பட்டு இருந்ததினால் அந்த அரிவாளை என்னால் சரியாக எடுக்க முடியவில்லை. உடனே அந்த அரிவாளை தமிழ்ச்செல்வன் எடுத்து எனது கழுத்தை நோக்கி வெட்டினார். நான் தலையை சாய்த்ததால் எனது இடது பக்க கன்னத்திற்கு அருகில் அந்த வெட்டு பட்டது. அதன் பின்னர் எதிரி விஜய் அங்கு கிடந்த கம்பை எடுத்து எனது முதுகிலும், தலையிலும் அடித்தார்.

அதன் பின்னர், எதிரிகள் 3 பேரும் மீனாட்சியின் வீட்டிற்குள் சென்று மீனாட்சியையும், அவரது அம்மாவையும் அடித்தார்கள். என்னையும், மீனாட்சியையும் தவறாக இருந்ததாக நினைத்து பழைய பகையை வைத்து அடித்தார்கள். (சாட்சி அவருடைய முகத்திலும், கையிலும் ஏற்பட்ட காயத்தழும்புகளை காண்பித்தார்.) நான் கீழே விழுந்து விட்டேன். அக்கம், பக்கம் உள்ளவர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு போனார்கள். அங்கு வைத்து நான் போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனக்கு கையில் அடிப்பட்டிருந்ததினால் கைரேகை வைத்து கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

(சான்று பொருட்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 17:41:21 +0530